இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்
செவ்வாய்க்கிழமை 06.01.2026

# செய்ய முடியாத சாதனையைச் செய்து காட்டிய முதலமைச்சர்!

அரசு ஊழியர்களின் 22 ஆண்டுகாலக் கோரிக்கை அது. ‘அதை வழங்க முடியாது’ என்று பலராலும் கருத்துச் சொல்லப்பட்டு வந்தது. ‘இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற முடியாத நிலையில் அரசு ஊழியர்களின் நம்பிக்கையை தி.மு.க. அரசால் பெற முடியவில்லை’ என்றும் எதிர்க்கட்சிகள் மனதுக்குள் சிரித்துக் கொண்டு இருந்தார்கள்.

ஆனால் இலட்சக்கணக்கான அரசு ஊழியர்களின் குடும்பங்களின் உள்ளம் குளிரும் வகையில் மகிழ்ச்சியான, நிறைவான, வாழ்நாள் முழுவதும் மனம் மகிழும் அளவிலான அறிவிப்பைச் செய்து, யாராலும் செய்ய முடியாத சாதனையைச் செய்து காட்டி விட்டார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இருபது ஆண்டுகளாக தலைமைச் செயலகம் பார்க்காத காட்சியை நேற்றைய தினம் தலைமைச் செயலகம் கண்டது. முதலமைச்சர் அறைக்கு வந்த அரசு ஊழியர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் கேக் ஊட்டினார்கள். அரசு ஊழியர்கள் முதலமைச்சர் அவர்களுக்கு கேக் ஊட்டினார்கள். அரசு ஊழியர்கள் பட்டாசு வெடித்துக் கொண்டாடிக் கொண்டார்கள்.

உறுதி அளிக்கப்பட்ட வாக்குறுதியை ‘உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டமாக’ அறிவித்து விட்டார் உறுதிமிக்க முதலமைச்சர் அவர்கள்.

‘கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிதிநிலைமை சீரானதும் நிறைவேற்றுவோம்’ என்றார் முதலமைச்சர். அதனைச் செய்து காட்டி விட்டார் முதலமைச்சர் அவர்கள்.

- ★ **மாநில அரசு அலுவலர்கள் பெற்ற கடைசி மாத ஊதியத்தில் 50 சதவீதம் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியமாக வழங்கப்படும். இவ்வாறு 50 சதவீதத்திற்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் வழங்குவதற்கு, பணியாளர்களின் 10 சதவீத பங்களிப்போடு, ஓய்வூதிய நிதியத்திற்குத் தேவைப்படும் கூடுதல் நிதி முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்கும்.**
- ★ **ஓய்வூதியதாரர் இறந்துவிட்டால் அவர் ஏற்கெனவே பரிந்துரைத்த குடும்ப உறுப்பினர்களுக்கு அவர் பெற்று வந்த ஓய்வூதியத்தில் 60 சதவீதம் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும்.**
- ★ **அரசு அலுவலர்கள் ஓய்வு பெறும் போதும், பணிக்காலத்தில் இறக்க நேரிடும் போதும், அவரவரின் பணிக்காலத்திற்கேற்ப 25 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் பணிக்கொடை வழங்கப்படும்.**
- ★ **ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதிப் பணிக்காலத்தை நிறைவு செய்யாமல் பணி ஓய்வு பெறும் அனைத்து அலுவலர்களுக்கும் குறைந்தபட்ச ஓய்வூதியம் வழங்கப்படும்.**

இவ்வாறு அறிவித்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

அரசு ஓய்வூதியம் என்பது அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஓய்வுக்குப் பிறகும், அவர்கள் வாழ்நாள் முழுவதும் தொடர வேண்டிய சமூக பாதுகாப்பு என்பதை உறுதி செய்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

தமிழ்நாடு அரசு பழைய ஓய்வூதியத் திட்டத்தை ஏற்பதன் மூலம் ஓய்வூதியப் பங்களிப்புக்கு செலுத்த வேண்டிய கூடுதல் பங்களிப்பு தொகையாக ரூ.13 ஆயிரம் கோடியும், பணியாளர்கள், ஆசிரியர்கள் நலனுக்காக அரசுப் பங்களிப்பாக ரூ.11 ஆயிரம் கோடியும் ஆக ரூ.24 ஆயிரம் கோடி நிதிச்சுமையை தமிழ்நாடு ஏற்றிருப்பதும், ஓய்வூதியர் மறைவுக்கு பிறகு குடும்ப ஓய்வூதியமாக 60 சதவீதம் வழங்கு முன்வந்திருப்பதும், நாட்டுக்கு முன்னுதாரணமாக அமையும்.

“எங்கள் ஓய்வு கால வாழ்க்கை அர்த்தமுள்ளதாக முதலமைச்சர் மாற்றி உள்ளார். இன்றைய அறிவிப்பின் மூலம் 6.5 லட்சம் பேர் வாழ்க்கையில் முதலமைச்சர் ஒளியேற்றி வைத்திருக்கிறார்” என்று அரசு ஊழியர் சங்கத்தினர் சொல்லி இருக்கிறார்கள்.

புதிய திட்டமாக ‘தமிழ்நாடு உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம்’ (Taps) என்ற பெயரில் வெளியிடப்பட்டிருக்கிறது. அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு முன்பு இருந்து வந்த பழைய ஓய்வூதிய திட்டத்தின் பலன்கள் மீண்டும் கிடைக்கும் வகையில் இத்திட்டம் இருக்கிறது.

புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்ட பின், ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதிப் பணிக் காலத்தை நிறைவு செய்யாமல் பணி ஓய்வு பெறும் அனைத்து அலுவலர்களுக்கும் குறைந்த பட்ச ஓய்வூதியம் வழங்கப்படும் என்ற அறிவிப்பு மாண்புமிகு முதலமைச்சரின் கருணையின் வெளிப்பாடாக அமைந்துள்ளது.

ஒன்றிய அரசு தந்து வருகின்ற கடுமையான நிதி நெருக்கடிகளுக்கும், நிதிச் சுமைகளுக்கும் மத்தியிலும், “தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்” என்ற புதிய திட்டத்தை அறிவித்து விட்டார் முதலமைச்சர். அது தான் மிகமிக முக்கியமானது ஆகும்.

ஓய்வூதியத்தை வழங்குவது குறித்து, தகுந்த பரிந்துரைகளை வழங்கிட அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப்சிங் பேடி தலைமையில் ஒரு குழுவை அரசு அமைத்து, அந்தக் குழுவின் அறிக்கையை ஏற்று சிறப்புமிக்க அறிவிப்பை முதல்வர் வழங்கி இருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் தொடர்ந்து அரசு ஊழியர்கள், ஆசிரியர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தியபடி இருந்தார்கள். இதன் தொடர்ச்சியாக “தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தைச் (Tamil Nadu Assured Pension Scheme - TAPS)” செயல்படுத்திக் காட்டி விட்டார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**“முத்தமிழறிஞர் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு எவ்வாறு காவலராக திகழ்ந்தாரோ அதேபோன்றுதான் நமது முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களும் இருந்து வருகிறார். நாங்கள் நம்பி வந்ததை நிறைவேற்றி இருக்கிறார் முதலமைச்சர்” என்று சொல்லி இருக்கிறார்கள் அரசு ஊழியர் சங்கத்தினர்.**

“நிதிநிலைமை சீரடைய சீரடைய அனைத்துத் தரப்பினரின் கோரிக்கைகளும் நீங்கள் கேட்காமலேயே நிறைவேறும்” என்று சொல்லி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

**2003 ஆம் ஆண்டு அரசு ஊழியர்களை பாடாய் படுத்தினார் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா. பழனிசாமியும் தன் பங்குக்கு கொச்சைப்படுத்தினார். அரசு ஊழியர்கள் வாங்கும் சம்பளத்தை விளம்பரமாகப் போட்டு எரிச்சல் உண்டாக்கினார். இதனால் காயம் பட்ட அரசு ஊழியர்கள் அனைவருக்கும் இதயத்தில் பால் வார்த்துவிட்டார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.1.2026) சென்னை, விருகம்பாக்கத்தில் நடைபெற்ற, மறைந்த திரைப்பட தயாரிப்பாளர் எம்.சரவணன் அவர்களின் படத்திறப்பு மற்றும் புகழ் வணக்கம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, அவரது திருவுருவப் படத்தை திறந்து வைத்து, மலர்க்கொத்து வைத்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து குழும நிறுவனத்தின் இயக்குநர் என்.ராம், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், நாடாளுமன்ற உறுப்பினர் கலைஞானி கமல்ஹாசன், கவிப்பேரரசு வைரமுத்து, நல்லி குப்புசாமி, இயக்குநர்கள் எஸ்.பி.முத்துராமன், வி.சி.குகநாதன், ஏ.வி.எம். குடும்பத்தைச் சார்ந்த எம்.பாலசுப்ரமணியம், எம்.எஸ்.குகன், திருமதி அருணா குகன் ஆகியோர் உடனிருந்தனர்.

### ரூ.15.30 கோடியில் 17 முடிவுற்ற பணிகள் திறப்பு!

# இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ரூ.108.90 கோடி மதிப்பீட்டில் 19 புதிய திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, ஜன. 6 - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 3.01.2026 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 108 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 11 திருக்கோயில்களில் 18 புதிய திட்டப் பணிகள் மற்றும் ஒரு பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டடம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டி, 15 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் 7 திருக்கோயில்களில் 10 முடிவுற்ற திருப்பணிகள் மற்றும் 6 சரக ஆய்வாளர் அலுவலகங்களை திறந்து வைத்து, சிற்றுந்துகளின் பயன்பாட்டினை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.**

இந்து சமய அறநிலையத்துறையானது அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வரலாற்று சிறப்புமிக்க திட்ட செயலாக்கம், திருக்கோயில்களுக்கு குடமுழுக்குகள், திருத்தேர்களை பழுதுபார்த்து வீதிஉலா, திருக்குளங்களை புனரமைத்தல், பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்திவழங்குதல், திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத் தல், அன்னதானத் திட்டம் விரிவாக்கம், மலைத் திருக்கோயில்கள் மற்றும் முக்கிய திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள் அமைத்தல், ஒருகால பூசைத் திட்டம் விரிவாக்கம், ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் பிள்ளைகளுக்கு மேற்படிப்பிற்கான கல்வி உதவித்தொகை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை செம்மையாக செயல்படுத்தி வருகிறது.

11 திருக்கோயில்களில் 18 புதிய திட்டப் பணிகள் மற்றும் ஒரு பள்ளியின் கூடுதல் வகுப்பறை கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தல்

இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம், இராமநாதசுவாமி திருக்கோயிலில் 59.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அக்னி தீர்த்தம் படித்துறை, வாகன நிறுத்துமிடம், பிர்லா காட்டேஜ் பகுதி, திருக்கோயில் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் அடிப்படை வசதி மேம்படுத்தும் பணி உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளுதல்; 16.48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தென்காசி மாவட்டம், குற்றாலம், ஸ்ரீ பராசக்தி வித்யாலயா சி.பி.எஸ்.சி. பள்ளியில் புதியதாக 54 கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்; திருவாரூர், தியாகராஜசுவாமி திருக்கோயிலில் 7.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கமலாலய திருக்குளம் திருப்பணி, தேவாசிரிய மண்டபம் மற்றும் முன்மண்டபம் பழுது பார்த்து புதுப்பித்தல்;

திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூர், கொண்டத்துக்காளியம்மன் திரு க்கோயிலில் 6.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருமாளிகை பத்தி மண்டபம் கட்டுதல்; புதுக்கோட்டை மாவட்டம், குலமங்கலம், பசுபதீஸ்வரர் திருக்கோயிலில் 3.69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சன்னதி மகாமண்டபம் திருமதில்சுவர் திரும்ப கட்டுதல்; சென்னை, வியாசர்பாடி, இரவீஸ்வரர் திருக்கோயிலில் 3.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு கட்டுதல்;

தேனி மாவட்டம், குச்சனூர், சுயம்பு சனீஸ்வர பகவான் திருக்கோயிலில் 2.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்கள் இளைப்பாறும் மண்டபம் கட்டுதல்; புதுக்கோட்டை மாவட்டம், வெள்ளாளவிடுதி, அகஸ்தீஸ்வரர் திருக்கோயிலில் 2.53 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சன்னதி மகாமண்டபம் திருமதில்சுவர் திரும்ப கட்டுதல்;

ஈரோடு மாவட்டம், பெருந்துறை, செல்லாண்டியம்மன் திருக்கோயிலில் 1.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வசந்த மண்டபம் கட்டுதல்; பெருந்துறை, வாகைத்தொழுவம்மன் திருக்கோயிலில் 1.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இராஜகோபுரம் கட்டுதல்; திண்டுக்கல் மாவட்டம், தாடிக்கொம்பு, சௌந்தரராஜப் பெருமாள் திருக்கோயிலில் 1.73 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வசந்த மண்டபம் கட்டுதல்; கோவை மாவட்டம், ஒத்தக்கால் மண்டபம், நவகோடி நாராயணப் பெருமாள் திருக்கோயிலில் 1.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்டுதல்; என மொத்தம் 108.90 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 18 புதிய திட்டப் பணிகள் மற்றும் ஒரு பள்ளியின் கூடுதல் வகுப்பறை கட்டடத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்.

7 திருக்கோயில்களில் 10 முடிவுற்ற திருப்பணிகள், 6 சரக ஆய்வாளர் அலுவலகங்கள் திறந்து வைத்தல் மற்றும் சிற்றுந்துகளை தொடங்கி வைத்தல், கோவை மாவட்டம், தேக்கம்பட்டி, வனபத்ரகாளியம்மன் திருக்கோயிலில் 6.86 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட நடைபாதை மண்டபம், சுற்றுச்சுவர், முடி காணிக்கை மண்டபம் மற்றும் உடைமாற்றும் அறை;

தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேஸ்வரம், நாகநாத சுவாமி திருக்கோயிலில் 3.10 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட பக்தர்கள் தங்கும் விடுதி; கோவை மாவட்டம், பூண்டி, வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோயிலில் 1.45 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட பக்தர்கள் தங்கும் விடுதி; நாமக்கல் மாவட்டம், காளிப்பட்டி, கந்தசாமி திருக்கோயிலில் 85 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட புதிய அன்னதானக் கூடம்;

1.81 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட காஞ்சிபுரம் மாவட்டம், ஏகாம்பரநாதர் திருக்கோயில் செயல் அலுவலர் அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம், தகட்டூர், பைரவநாத சுவாமி திருக் கோயில் செயல் அலுவலர் அலுவலகம், மயிலாடுதுறை மாவட்டம், திருஇந்தளூர், பரிமள ரங்கநாதர் திருக் கோயில் செயல் அலுவலர் அலுவலகம், கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி மற்றும் திட்டக்குடி, அரியலூர் மாவட்டம் கீழப்பழுவூர், இராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி, மயிலாடுதுறை மாவட்டம் புத்தூர் மற்றும் சீர்காழி ஆகிய இடங்களில் 6 சரக ஆய்வாளர் அலுவலகங்கள்;

ஈரோடு மாவட்டம், சென்னிமலை, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 1.23 கோடி ரூபாய் செலவிலான 3 சிற்றுந்துகள்; என மொத்தம் 15.30 கோடி ரூபாய் செலவிலான 10 முடிவுற்ற பணிகள், 6 சரக ஆய்வாளர் அலுவலகங்களை திறந்து வைத்து, சிற்றுந்துகளின் பயன்பாட்டினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் முனைவர் துரை. இரவிச்சந்திரன், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, கூடுதல் ஆணையர் (திருப்பணி) பொ.ஜெயராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக இராமேஸ்வரத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராம லிங்கம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், இராமநாதசுவாமி திருக்கோயில் இணை ஆணையர் / செயல் அலுவலர் கே.செல்லதுரை, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி

# வள்ளியூரில் - புதிதாக கூடுதல் மாவட்ட நீதிமன்றம்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு கோரிக்கை ஏற்பு! அரசாணை வெளியீடு!

நெல்லை, ஜன. 6 - திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரில் புதிதாக கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அமைப்பதற்கு, பேரவைத் தலைவரும், இராதாபுரம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினருமான மு.அப்பாவு அவர்களின் கோரிக்கையினை முதலமைச்சர் அவர்கள் ஏற்று, சட்ட மன்றத்தில் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மூலம் அதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

முதலமைச்சர் அவர்கள், வள்ளியூரில் புதிதாக கூடுதல் மாவட்ட நீதி மன்றம் திறப்பதற்கான அரசாணை அறிவிப்பினை தற்போது வெளியிட்டுள்ளார்கள். அது போல், பேரவைத் தலைவர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று திசையன் விளையிலும், Cum-court திறப்பதற்கு ஏற்கெனவே அரசாணை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு நீதிமன்றங்களையும் திறப்பதற்கு அரசாணை அறிவிப்பு வெளியிட்ட முதலமைச்சர் அவர்களுக்கு அப்பகுதி மக்கள் மற்றும் வழக்கறிஞர்கள் நன்றியைத் தெரிவிப்பதோடு, மிக விரைவிலேயே இரண்டு நீதி மன்றங்களும் திறக்கப்படும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.



‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ பிரச்சார வாகனத்தை அமைச்சர் ராஜேந்திரன் தொடங்கி வைத்தார். இதில் சேலம் மாநகரக் கழகச் செயலாளர் ரகுபதி, கன்னங்குறிச்சி பேரூர்க் கழகச் செயலாளர் தமிழரசன் உள்ளிட்ட நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.